| | | |
|---|---|---|
| **Title of the Book** | : | International Quds Day Conference - 2003 Seminar Proceedings |
| **Compiled by** | : | Dr. Moulavi. K.M.H. Khalideen |
| **Published by** | : | Islamic Research Centre of Sri Lanka, 54, Dean's Road, Addalaichenai -04, Sri Lanka |
| **First Edition** | : | December - 2003 |
| **Printed at** | : | Multi Offset Printers, Akkaraipattu, Sri Lanka |
| **Prize** | : | Rs. 100/- |
| **ISBN** | : | **955 - 8220 - 08 - 06** |

Information Resource Centre
CLASS NO
ACC.NO 048839

## தொகுப்பாசிரியர் குறிப்பு

சர்வதேச அரங்கிலும், முஸ்லிம் உலகிலும் இக்காலத்தில் முக்கிய பிரச்சினையாக விளங்குவது பலஸ்தீனமும், மஸ்ஜிதுல் அக்ஸாவுமாகும். பலஸ்தீனில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸா உலக முஸ்லிம்களின் புனிதத்தலமாகும். இஸ்லாத்தின் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 7ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வந்தது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சிலுவை வீரர்களால் அது கைப்பற்றப்பட்டாலும், முஸ்லிம் உலகம் அதனை அந்த நூற்றாண்டிலேயே மீண்டும் மீட்டுக் கொண்டது. தொடர்ந்தும் முஸ்லிம்களின் ஆட்சியில் பலஸ்தீனும் அல் அக்ஸாவும் இருந்து வந்தன.

எல்லா நபிமார்களையும் ஏற்கும் நம்பிக்கையுடைய முஸ்லிம்களின் ஆட்சியில், புனித நகராகிய மஸ்ஜிதுல் அக்ஸாவும் பலஸ்தீனும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதுடன் ஏனைய சமயத்தவர்களுக்கும் அதனைத் தரிசிக்க வாய்ப்பளித்து வந்துள்ளனர். மனித இனத்தை மாண்புடன் மதிக்கும் இஸ்லாமிய ஆட்சியில் அனைவரும் சமத்துவமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தும் வந்துள்ளனர்.

1948ம் ஆண்டில் மேற்குலகநாடுகளின் சதிகளாலும், ஸியோனிச யூதத் திட்டங்களாலும் மீண்டும் அவை முஸ்லிம்களிடமிருந்து, யூதஸியோனிச சக்திகளின் கைகளில் சிக்குண்டுள்ளன. பலஸ்தீனில் வாழ்ந்த நாற்பது இலட்சம் முஸ்லிம்கள் ஸியோனிச யூதக் கும்பலால் அவர்களது சொந்த நாடான பலஸ்தீனிலிருந்து, அகதிகளாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அங்கு வாழும் முஸ்லிம்களின் நிலங்களையும் படைபலத்தைப் பாவித்து ஸியோனிச யூதச் சக்திகள் தொடர்ந்தும் அபகரித்து வருகின்றன. இதனால் தங்களது நாட்டை மீட்க பலஸ்தீன முஸ்லிம்கள் புனிதப் போரில் இறங்கியுள்ளனர்.

அவர்களின் போராட்டம் உலகளாவிய ரீதியில் அனுதாபத்தைப் பெற்றிருந்த போதும் அமெரிக்காவினதும், ஐரோப்பிய சக்திகளினதும் கூட்டு இணைப்பால் ஸியோனிச யூதச் சக்திகள் துணிச்சலுடன் இயங்குகின்றன. முஸ்லிம் உலகம் இதனால் தனது சக்தியை வெளிக்காட்ட முடியவில்லை. முஸ்லிம் நாடுகள் ஏகாதிபத்தியவாத அமெரிக்க, ஐரோப்பிய, யூத சக்திகளுக்கு அடிபணிந்துள்ளமை இன்னுமொரு காரணமாகும்.

உண்மையான இஸ்லாமிய உணர்வுடன் பலஸ்தீனுக்கும், அல் அக்ஸாவின் மீட்சிக்கும் வழி அமைத்துக் கொடுத்தது ஈரான் இஸ்லாமியப் புரட்சியாகும். அப்புரட்சியின் தலைவர் ஆயத்துல்லாஹ் ருஹுல்லாஹ் மூஸவி இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்கள், "முஸ்லிம் உலகின் முதலாவது முக்கிய பிரச்சினை பலஸ்தீன் பிரச்சினை ஆகும்" என தெளிவு படுத்தினார். அதற்காக உலக முஸ்லிம்கள் ஒன்றுபட்டு, பலஸ்தீன மக்களுக்கும் அல்அக்ஸாவின் மீட்சிக்கும் உதவிபுரிய வேண்டும் என பகிரங்கமான வேண்டுகோளை விடுத்தது மட்டுமன்றி, பலஸ்தீனுக்கு ஆதரவாக ஈரான் இஸ்லாமியக் குடியரசு படைகளை அனுப்பவும் தயாரானார். சதாம் ஹுஸைனின் குழப்பங்களால் அது தடைப்பட்டுப் போனது. 2001ம் ஆண்டில் அகில உலக இன்திபாழா ஆதரவு மகாநாடொன்றை ஈரான் இஸ்லாமியக் குடியரசு தெஹ்ரானில் கூட்டியது. உலகில் பல நாடுகளில் இருந்தும் அம்மகாநாட்டின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம்மகாநாட்டின் பின்னர் "இன்திபாழா" போராட்டம் புதிய முனைப்புப் பெற்றது. பலஸ்தீன முஸ்லிம்கள் வெற்றிப்பாதையில் தங்களது போராட்டத்தை இஸ்லாமியப் பின்னணியில் முன்னெடுத்துச் செல்கின்றனர். பல இஸ்லாமிய இயக்கங்கள் அப்போராட்டத்துக்கு ஆதரவு அளித்து வருகின்றன.

அண்மையில் ஈரானில் ஏற்பட்ட பூகம்பம் உலக மக்களின் அனுதாபத்துக்கு வழி அமைத்துள்ளது. முப்பதாயிரத்துக்கு மேல் மக்களைப் பலிகொண்ட இவ்வியற்கை அனர்த்தத்தினால் அப்பிராந்திய மக்கள் மிகவும் சோகத்துக்குள்ளாகியுள்ளனர்.

அவர்களது துன்பத்தைத் துடைக்க இலங்கை மக்களும் குறிப்பாக முஸ்லிம்கள் தங்களது உதவிக் கரங்களை நீட்டுவது அவசியமாகும்.

எமது இஸ்லாமிய ஆய்வு நிலையத்தால் வெளியிடப்படும் இந்நூல் மூலம் கிடைக்கும் வருமானத்தை ஈரானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அன்பளிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளோம். மனிதாபிமான அடிப்படையில் நாம் மேற் கொண்டுள்ள இம்முயற்சிக்கு சகலரும் ஒன்றுபட்டு உதவிகள் வழங்க முன்வர வேண்டும் என உங்களை மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**அல்லாஹ்வின் பாதையில் உள்ள நாம், மீண்டும் அல்லாஹ்விடமே மீளக் கூடியவர்களாக உள்ளோம். இவ்வுலகில் எமக்கென்று நிலையான சொத்துக்கள் ஒன்றும் இருக்கப் போவதில்லை. நாம் செய்கின்ற நற்செயல்களும், எம்மால் உருவாக்கிவிடப் படுகின்ற நற்சந்ததியினரும், நல்ல தருமங்களுமே நிலைத்து நிற்பவையாகும். ''நல்ல நோக்கங்களுக்காகவும், இறைபக்தியை மேன்மைப்படுத்து வதற்காகவும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். தீய செயல்களிலிருந்தும், பகைமையை உருவாக்கும் நோக்கங்களிலிருந்தும் எம்மை நாம் காப்பாற்றிக் கொள்வோம்'' என்னும் அல்குர் ஆனின் வழிநின்று மனித சமுதாயத்தின் ஐக்கியத்துக்கும், மேம்பாட்டுக்கும் பணிபுரிவோம். அல்லாஹ் எமக்கு நேர்வழி காட்டப் பிரார்த்திப்போம்.**

*இங்ஙனம்,*
*மௌலவி, கே.எம்.எச். காலிதீன்*
*பணிப்பாளர்,*
*இலங்கை, இஸ்லாமிய ஆய்வு நிலையம்,*
*அட்டாளைச்சேனை - 04*
*இலங்கை*

## *Massage from the Chief Guest on*

# INTERNATIONAL QODS DAY – 2003

It is a great pleasure to inaugurate the International Quds Day Conference – 2003 in the South Eastern University of Sri Lanka sponsored by the Islamic Research Centre of Sri Lanka and jointly organized by Islamic Research Centre of Sri Lanka and South Eastern University Teachers' Association

It is gratifying to note that the Head of the Department of Languages of the South Eastern University Moulavi K.M.H. Khalideen had made the invitation to conduct this Day today. He is also the Director of the Islamic Research Centre of Sri Lanka and the President of South Eastern University Teachers' Association. I recognize him as one of the foremost Islamic scholars in Sri Lanka, who make arrangement to conduct the International Qods Day seminar every year in the recent past.

Palastinian Problems is globally acclaimed as an important matter, which all of us should be aware of. It is the place of importance the whole world considers it as the centre of attraction. In recent times a lot of activities have been taken place at the South Eastern University of Sri Lanka. International Qods Day Conference one of the events.

Palestine is the home land for Palestinians. This land was occupied by Zionist Jews after the second world war. The western Powers helped the Jews to make a home land for them in Palestine. The Zionist Jews Continually encoroching the land by force with the help of western powers. Millions of Palestinians became refugees in the Middle Eastern Countries. They are the displaced people now. The western powers are ignoring the human rights in Palestine and continually supporting the Zionist Jews. This is the burning problem in the Middle East now.

Therefore as the highest seat of education, our staff and students should come to know the recent development in Palestine. Several research papers are to be presented in this seminar, mostly prepared by the staff of this University and outside experts. It will be appreciated if these research articles are published in the form of a Journal. I am sure the organizers will look into this matter.

Ware also happy to see that Islamic Civilization is being considered as the seat of par excellence in this University which has initiated link programme with universities of Cairo, Qatar, Al Azhar and Pakistan. The Head of the Department of Languages and the Vice Chancellor are making every effort for this effective and efficient link programmes, which will undoubtedly develop experts in Islamic Civilization in this university.

At a time when the University Grants Commission is pressing for adopting current trends in educational matters, one should be impressed to see that an International Seminar of this nature is being need today to achieve the educational persuits on Palastenian problems, which we feel is an excellent exercise.

*Prof. V.K. Ganesalingam.*
*B.S.c (Hons.) Ceylon. M. Sc. (Hawaii)*
*Ph. D. (Lond) Hon. D. Sc. (Sri Lanka). J.P.*

# உள்ளடக்கம் - Contents


| | | Page |
|---|---|---|
| 01. | Publication | I |
| 02. | Compiled, Printing and Publishing with ISBN | II |
| 03. | Note of Compiler | III-V |
| 04. | Message from the Chief Guest | VI-VII |
| 05. | The feelings of the Muslims towards Al Qods (Arabic) Dr. Moulavi. K.M.H. Khalideen | 1- 5 |
| 06. | Baithul Muqaddus Holy Land of the world Muslims (Tamil) Dr. Moulavi. K.M.H. Khalideen | 6-13 |
| 07. | Are you listening the to voice of the World (Poem- Tamil) "Marhoom Kavichudar Anpu Mohideen" | 14-20 |
| 08. | My soul with Palestine – (Poem – Tamil) "Kalaipirai Wahabdeen" | 21-22 |
| 09. | Palestine "A Geo Politic, View" M.I.M. Kaleel | 23-34 |
| 10. | Political and Geographical importance of Palestine(Tamil) Prof. V. Nandakumar | 35-62 |
| 11. | Palestinians in Prison (Poem - Tamil) S.M. Ayoob | 63-64 |
| 12. | The Economic Condition of Palestine (English) Dr. S.M.M. Ismail | 65 |
| 13. | Isriaelists in occupied Palestinian Land (Tamil) M.M. Fazil | 70-74 |
| 14. | Final Report of the International Qods Day Conference. Prepared by: Dr. Moulavi. K.M.H. Khalideen | 75-80 |